திருத்தப்பட்டது

**செய்தி வெளியீடு எண்.672** **நாள்.18.8.2008**

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 2500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 19.8.2008 அன்று சுழல்நிதி மான்யம் வழங்குகிறார் – சிறப்பு செய்திக் கட்டுரை**

தமிழகமெங்கும் இயங்கி வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமது செயல்பாட்டில் மிகுந்த வேகத்தையும், ஊக்கத்தையும் பெற்றுள்ளன. இதற்கு காரணம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களின் நிர்வாகம் கொண்டு வரப்பட்டதே ஆகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள், 1989ம் ஆண்டு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரை பல்வேறு நிலைகளைக் கடந்து வந்துள்ளன. எனினும், இந்த அரசு 13.5.2006 அன்று பொறுப்பேற்ற பிறகே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பொற்காலம் எனில் அது மிகையல்ல.

சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டிலிருந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களின் கீழ் செயல்படும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. சுய உதவிக் குழுக்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாண்புமிகு அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள், பல்வேறு மாவட்டங்களில் தான் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் எல்லாம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மான்ய உதவி வழங்குவது என்பது, முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. 2006–2007ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடற்கரையோர மாவட்டங்களிலும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 30 ஆயிரம் வீதம் மான்யம் வழங்கப்பட்டது. இவ்வாறு ஏறத்தாழ 33 ஆயிரத்து 547 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 88 கோடியே 82 இலட்சம் ரூபாய் மான்யம் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 6 இலட்சத்து 70 ஆயிரம் மகளிர் பயன் பெற்றுள்ளனர். அதுமட்டுமல்ல இந்த 12 மாவட்டங்களிலும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான மான்யமாக 2,472 குழுக்களுக்கு ரூபாய் 31 கோடியே 55 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டது.

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் தற்போதைய எண்ணிக்கை ஏறத்தாழ 3 இலட்சத்து 70 ஆயிரம் ஆகும். இவற்றில் சுமார் 60 இலட்சம் மகளிர் உறுப்பினராக உள்ளனர். இந்த குழுக்களின் சேமிப்புத் தொகை ரூபாய் 1,826 கோடியாகும். வங்கிகளின் மூலம் 3 இலட்சத்து 31 ஆயிரத்து 853 குழுக்களுக்கு ரூபாய் 3,163 கோடியே 40 இலட்சம் வங்கிக் கடனாக அளிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் புதியதாக 25 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. குழு உறுப்பினர்களின் பயிற்சிக்கான தினப்படி ரூபாய் 45

ஆக வழங்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பிற்கு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் அளித்திடவும், கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து கடன் பெற்று குழுக்களுக்கு வழங்கவும், தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது சிறப்பாக குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல சுய உதவிக் குழுக்கள் தேவையான அளவிற்கு வங்கிக் கடன் பெறுவதற்கு ஏதுவாக கடனுதவிக்கான இலக்கு 2008–09 ஆம் ஆண்டில் ரூபாய் 1,600 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களும், மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு. பழனிமாணிக்கம் அவர்களும் மற்றும் வங்கிகளின் தலைவர்களும் 12.4.2008 அன்று பங்கேற்று நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

நகர்ப்புற பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்பு அரசு மான்யம் வழங்கப்படுவதில்லை. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நகர்ப்புற குழுக்களுக்கும் சுழல் நிதி மான்யம் வழங்கப்படும் என்ற முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2006–2007 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் நகர்ப்புற குழுக்களுக்கு ரூபாய் 5 கோடியும், 2007–08 ஆம் ஆண்டில் 25 ஆயிரம் நகர்புறக் குழுக்களுக்கு ரூபாய் 25 கோடியும் சுழல் நிதி மான்யமாக வழங்கப்பட்டது என்பது சிறப்பாக சுட்டிக் காட்ட வேண்டிய ஒரு சாதனையாகும்.

அனைத்துத் தகுதிகள் பெற்றிருந்தும், சுழல் நிதி மான்யம் கிடைக்காமல் 1 இலட்சத்து 50 ஆயிரம் குழுக்கள் இருந்தன. சுழல் நிதி கிடைக்காததால் இக்குழுக்கள் வங்கிக் கடன் பெறுவதில் சிரமம் இருந்தது. இதைக் கருத்தில் கொண்டு, வரலாறு காணாத அளவிற்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மான்யம் தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் வழங்க அரசு இவ்வாண்டு 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தனது தொடர் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளின் மூலம் பல்வேறு மாவட்டங்களில் இக்குழுக்களுக்கு நேரடியாக தனது கையாலேயே இந்த சுழல்நிதி மான்யத்தை வழங்கி வருகிறார். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மான்யம் வழங்குகின்ற இந்த தொடர் நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக 19.8.2008 அன்று மாலை சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாக் கலையரங்கில் 2,500 மகளிர் குழுக்களுக்கு ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மான்யமும், ரூ. 24.86 கோடி வங்கிக் கடனும் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்த 2,500 குழுக்களுக்கும் அமைச்சர் அவர்களே நேரடியாக நிதி உதவி வழங்க உள்ளார். மேலும் இவ்விழாவில் அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய ஐந்து வங்கி மேலாளர்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கௌரவிக்கிறார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.